# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 47 — 1973 පෙබරවාරි 15 වැනි බ්‍රහස්පතින්දා — 1973.02.15

47 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 75 |
| பதவிகள்—வெற்றிடம் | 76 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | 79 |
| துணை விதிகள் | 80 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| வரவு செலவுத் திரட்டுகள் | — |
| ஆதன விற்பனைகள் | — |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | — |
| நானாவித அறிவித்தல்கள் | 81 |


கவனிக்க.—பொது வசதிகள் சபைச் சட்டமூலமும் இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ந் திகதிய ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

எல் ஜீ டீ/சி/4/(யூ)/5

நகர சபைகள் கட்டளைச் சட்டம்

184 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1958 இன் 42 ஆம் இலக்க சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்கா ஆகிய நான் இக்கட்டளை வாயிலாக சிலாபம் பட்டினம் சம்பந்தமான முன் சொல்லப்பட்ட பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 ஜனவரி 1 இன் 14,991/10 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் திருத்தப்பட்டவாறான 1970 ஒகத்து 19 இன் 14,919/6 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை அதனோடுள்ள கடைசிப் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் 1973 பெப்புரவரி 10 ஆம் தேதியிலிருந்து மேலும் திருத்துகிறேன் :—

" (ஆ) அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அப்பட்டினத்திற்கு ஒரு புதிய நகர சபை அமைக்கப்பட்டு அச்சபை தனது தலைவரைத் தெரிவுசெய்யும் வரைக்கும், அந்நோக்கத்திற்கென அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு நகர சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதற்குரிய கடமைகளைச் செய்வதற்குமாகப் பாணந்துறை, பிங்வத்தை, இல. 101 ஐச் சேர்ந்த திரு. எம். பீ. த சொய்சா குணத்திலக்க இராசபக்ச அவர்களை சிலாபம் பட்டினத்தின் கருமங்களை நிர்வகிப்பதற்காக விசேட ஆணையாளராக நியமிக்கிறேன். "

பீலிக்ஸ். ஆர்.. டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆடு சனவரி மீ 31 ந உ.

2–680—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு மே மீ 5 ந உ.

### நூவான்வெலைப் பட்டின சபை

*களியாட்டவரிக் கட்டளைச் சட்டம்*

(267 ம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் நூவான்வெலை பட்டின சபையால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம், அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு அப் பிரிவின் (2) ம் பிரிவின் நியதிகளின்படி வெளியிடப்படுகின்றது.

**தீர்மானம்**

நூவான்வெலைப் பட்டின சபையின் நிர்வாக எல்லைக்குள் நடத்தப்படும்—
" அக்கட்டளைச் சட்டத்தின் (வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக்கட்டணங்களமீது (267 ம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் இச்சபை 1966 மே 6 ந் தேதிய 14,694 ம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட தீர்மானத்தினால் அத்தகைய கட்டணங்கள் தொடர்பில் விதித்து அறவிடப்பட்ட வரிக்குப் பதிலாக நூற்றுக்கு இருபது வீதமான ஒரு வரியை இத்தீர்மானம் கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து இத்தால் விதித்து அறவிடுகின்றது. "

பி. சிறிவர்த்தன,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆம் சனவரி மீ 26 ந உ.

2–692—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### நாத்தாண்டிய பட்டின சபை

*பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்*

**1973 ம் ஆண்டுக்கான விசேட மலகூட வரி**

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 120 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக நாத்தாண்டிய பட்டினத்தின் 2, 3, 4, 7 ஆகிய வட்டாரங்களில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீதமானதும் முறையே மார்ச் 30, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாக செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை 1973 ஆம் ஆண்டுக்கு நாத்தாண்டிய பட்டின சபை விதித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வி. எஸ். டி அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1973 ம் ஆம் பெப்ரவரி மீ 5 ந உ.

2–691—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### புசல்லாவைப்பட்டின சபை

*பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்*

**1973 ம் ஆண்டுக்கான விசேட மலகூட வரி**

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக புசல்லாவைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள அசைவற்ற அதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேடமலகூடவரியை 1973 ம் ஆண்டுக்கு புசல்லாவைப் பட்டின சபை விதித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. வி. எஸ். டி. அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு, 1973 ம் ஆம் பெப்புருவரி மீ 6 ந உ.

2–726—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

## பதவிகள் – வெற்றிடம்

**" ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை " யின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்**

**படிகள்:**—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

2. **சேவை நிபந்தனைகள்.**—1960 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச்சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் ஏதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. **நியமன விதிகள்.**—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்த வேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவிகிதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவார். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின் படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும் அச் சேவையில் வேறொரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச்சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு, விதவைகள் அனாதைகள், இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறாயினும் பெண்களும் 55 வயதுக்குமேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச்சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள் 1952 ம் ஆண்டு ஜுலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின் படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றிச்சம்பள நிதிக்கு, தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சிமன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

5. பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பகாரர் : ————.

(ஆ) அவரது பிதா : ————.

(இ) அவரது பிதாவழிப் பேரன் : ————.

(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ————.

(விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா ? தனியாளரா ? அல்லது தாரமிழந்தவரா ? கைம்பெண்ணா ? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் : ————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில் நுட்ப கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 ............ | ........ | ...... | 1............ | ...... | ...... |
| 2 ............ | ........ | ...... | 2............ | ...... | ...... |
| 3 ............ | ........ | ...... | 3............ | ...... | ...... |
| 4 ............ | ........ | ...... | 4............ | ...... | ...... |
| 5 ............ | ........ | ...... | 5............ | ...... | ...... |

8. கல்வித் தகைமைகள் :—

(அ) சி.பா.த. பத்திரம்/க.பொ.த.ப. (சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல்தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க.பொ.த.ப. (உயர்தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(இ) வேறும் கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) கீழ் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—

1. சிங்களம் : ————.
2. தமிழ் : ————.
3. ஆங்கிலம் : ————.

9. பெற்றுள்ள எதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக : ————.

10. உயர்தொழில்/தொழில்நுட்ப/தொழில் அனுபவங்கள்

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) : ————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) : ————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக : —

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் : ————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் : ————.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? : ————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் : ————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா? :—

(அ) சிங்களம் : ————.

(ஆ) தமிழ் : ————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக : ————.

14. ஒரு நீதிமன்றத்தில் எதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக : ————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? : ————.

16. வேறு எதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) : ————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளை இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) : ————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————.

விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

### உள்ளூராட்சிச் சேவை

மருந்துப் பாகசாலையாளர் பதவிகளும், மேற்பார்வையிடும் பொது சுகாதார தாதி பதவிகளும்

42 இலக்கமும், 1973 ஜனவரி 12 தேதியுமிட்ட குடியரசு வர்த்தமானியின் பகுதி 4 ல் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்களைப் பெறுவதற்கான முடிவு தேதி 1973 மார்ச் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எட்கா பர்ளுந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

12.2.73,
த. பெ. 530,
கொழும்பு.

2-793—15.02.73 ந. திகதிய வர்த்தமானி இல. 47

---

### உள்ளூராட்சிச் சேவை

உள்ளூர் ஆட்சி மின்சார அத்தியட்சர்களின் சேவையின் தரம் 4 க்கான ஆட்சேர்ப்புக்கான பரீட்சை, 1973

உள்ளூர் ஆட்சி மின்சார அத்தியட்சர்களின் சேவையின் தரம் 4 க்கான ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையொன்று பரீட்சைகள் ஆணையாளரினால் 7.4.73 ல் நடாத்தப்படும். பரீட்சை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் நடைபெறும்.

**2. வேதனமும் சேவை நிபந்தனமும்**

(அ) உள்ளூர் ஆட்சிச் சேவையில் உள்ள தரம் 4, மின்சார அத்தியட்சர்கள் பதவிகளுக்கு வெற்றிடங்கள் வந்தாலும் வரும்பொழுதும் சித்தியடைந்த பரீட்சார்த்திகள் நியமிக்கப்படுவார்கள். இப்பதவிக்குரிய வேதனம் வருமாறு : வருடாந்தம் ரூபா 3,540—90—ரூபா 5,160. வருடாந்தம் ரூபா 4,260 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு. அரசாங்க வரிகள், நிபந்தனைகளுக்கிணங்க, ஒரு திருமணப்படியும் வழங்கப்படும். இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பளம் இல்லாதவையுமாகும். உள்ளூராட்சிச் சேவையில் ஏற்கெனவே இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிகளை வகிப்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்கள் தங்களுடைய புதிய பதவிகளிலும் தங்களது இளைப்பாற்றுச் சம்பள உரிமைகளை தொடர்ந்தும் கொண்டிருப்பார்கள். அவர்கள் தொடர்ந்தும் உ. ஆ. சே. கை. பெ. அ. பி. உ. ச. நிதிக்கு கட்டுப்பணங்கள் செலுத்துவார்கள்.

(ஆ) உள்ளூர் ஆட்சிச் சேவைப் பிரமாணங்களின் 22 (2) வது பிரமாணத்தின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவர். பதிற்கடமைக்காலப் பகுதி முடிவடைந்ததும், பதவியில் அவர்கள் உறுதிப்படுத்தப்படுவது கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். பதிற்கடமை காலப்பகுதி முதலில் 6 மாதங்களுக்குச் செயற்படும். உள்ளூர் ஆட்சிக் கட்டளைச்சட்டத்தின் (264 வது அதிகாரம்) ஏற்பாடுகளுக்கும், அதன் கீழ் இயற்றப்பட்ட எந்தப் பிரமாணத்திற்கும் அவர்கள் உள்பட்டவராவர்.

(இ) காசு அல்லது அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட உத்தரவாதச் சபையினுடைய நம்பிக்கை உத்தரவாத முறி ஒன்றை தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் கொடுக்க வேண்டி ஏற்படும்.

(ஈ) தாம் எந்த உள்ளூராட்சி மன்றத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்களோ அந்த உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள், தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் வசிக்கவேண்டி ஏற்படும்.

3. **தகுதி.**—15.3.73 ல் அல்லது அதற்கு முன் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட உள்ளூராட்சிச் சேவையிலுள்ள தரம் 1, தரம் 2, மின்சார முகாரிகள், இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவராவர். அவர்கள் தாம் சேவிக்கும் உள்ளூராட்சிமன்றத் தலைவரூடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

4. (அ) **விண்ணப்பங்கள்.**—(1) பரீட்சைப் பிரவேசத்துக்கான விண்ணப்பங்களை கீழ்க்கண்டவாறு மாதிரிப் படிவத்தில் கண்டவாறு தயாரிக்கப்பட்டு, உ. ஆ. சே. அ. ச. செயலாளர், த. பெ. 530, கொழும்பு என்று முகவரியிடப்படவேண்டும்.

(ஆ) 15.3.73 ல் அல்லது அதற்கு முன் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு கிடைக்கும்படி விண்ணப்பங்கள் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். இத்திகதியில் கிடைக்கப்பெறாத எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

(இ) அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் ஏற்கனவே ஊழியம் செய்விக்கப்படும் பரீட்சார்த்திகள், தாம் கடமைபார்க்கும் திணைக்களத்தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்/விசேட ஆணையாளர்/தலைவர் ஊடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இவ்விதம் ஒரு பரீட்சார்த்தி செய்யத் தவறினால் அவர் தகைமையிழந்தவராவார்.

(ஈ) 15.3.73 க்கு முன் உ. ஆ. சே. அ. சபைச் செயலாளருக்கு அனுப்பிவைக்கும்படி, நேரகாலத்துடன் தமது விண்ணப்பங்களை, திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்களிடம் சமர்ப்பிக்கும்படி பரீட்சார்த்திகள் வேண்டப்படுகிறார்கள்.

(உ) முறையாக பயனற்றனவாகச் செய்யப்பட்ட ரூபா 20 பெறுமதியான முத்திரைகளை, விண்ணப்பப் பத்திரம் கொண்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—(அ) விதந்துரைக்கப்பட்ட படிவத்தில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) இவ்வறிவித்தலினால் வேண்டப்பட்ட தகைமைகளுக்கு எல்லாவிதத்திலும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. **பரீட்சைப் பிரவேசம்.**—ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பிய பரீட்சார்த்திகளுக்கு, உ. ஆ. சே. அ. ச. செயலாளர், பிரவேசப்படிவங்களை விநியோகிப்பார். பரீட்சையை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம், பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது பிரவேசப் படிவங்களைக் கொடுக்க வேண்டும். இத்தகைய படிவத்தைக் கொடுக்கத் தவறும் பரீட்சார்த்தி தகைமையிழப்பவராவார்.

(2) தமக்குக் கொடுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அமரவேண்டும். தனக்குக் கொடுக்கப்பட்ட மண்டபத்தைத் தவிர்ந்த வேறு மண்டபத்தில் தோற்றும் பரீட்சார்த்திக்கும் பரீட்சைப் பிரவேசம் மறுக்கப்படும்.

(3) பிரவேச அட்டையுடன், நேரசூசியும் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சைத் தினத்தன்று மேற்பார்வை செய்யும் பரீட்சிப்பவரிடம் தனது பிரவேசப் படிவத்தைக் கையளிக்க வேண்டும்.

(4) பரீட்சைத் தினத்துக்குக் குறைந்தது 7 நாட்களுக்குள் தனது பிரவேசப்படிவம் கிடைத்திராத பரீட்சார்த்தி, தனக்குப் பிரவேசப்படிவம் கிடைக்கவில்லை என்றும், பின்வரும் தகவல்களைத் தந்தும், உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருடன் தொடர்பு கொள்ள வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் : ————.

(2) முழுப்பெயர் : ————.

(3) முழுத் தபால் முகவரி : ————.

**பி.கு.** :—பரீட்சைக்குப் பிரவேசம் அளிக்கப்பட்டால், தகைமை ஏற்றுக்கொள்ளப்பட்டதென்றாகாது.

6. இப்பரீட்சைக்கான பிரமாணங்களின் பிரகாரம் தகுதியற்றவர் என்று ஒரு பரீட்சார்த்தி காணப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது அதன் போது அல்லது அதன் பின் எந்த இடத்திலேயும், அவரது பரீட்சார்த்தம் இரத்து செய்யப்படத்தக்கது.

7. தம் அறிவின் எல்லைக்குள் பரீட்சார்த்திகளால் தரப்பட்ட எந்தத் தகவல்களும் பொய்யானவை என்று காணப்படும் பட்சத்திலும்கூட அவர்கள் நியமனம் பெற்றிருந்தால், பதவிநீக்கம் செய்யப்படத்தக்கவராவர். வேண்டுமென்றே எந்த உண்மையையும் மறைத்தால், இவ்விதமே தண்டிக்கப்படத் தக்கவராவர்.

8. **உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விடுதலை.**—உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு தமது சபைகளினால் கடமைபார்க்கும் உத்தியோகத்தர்களுக்குக் கடமை விடுதலை அளிக்கும்படி உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர்கள் தயவுடன் வேண்டப்படுகிறார்கள்.

9. **அடையாள அட்டைகள்.**—தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் மேற்பார்வையாளரின் திருப்திக்கிணங்க, பரீட்சை மண்டபத்தில் தாம் இன்னாரென்று அடையாளத்தை பரீட்சார்த்திகள் நிரூபிக்க வேண்டும். இதற்கெனப் பின்வரும் தஸ்தாவேஜுகளில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சற்பகுதி மா அதிகாரியினால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை ;

(ஆ) இப்பரீட்சைத் தினத்துக்கு முந்திய 3 வருடங்களுக்குள் விநியோகிக்கப்பட்ட சட்டப் பெறுமதியான கடவுச்சீட்டு ;

(இ) அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்தின் பேரில், இப்பரீட்சைத் தினத்துக்கு முந்திய 3 வருடங்களுக்குள் விநியோகிக்கப்பட்டதும் உடமையாளரின் புகைப்படத்தைக் கொண்டதுமான உத்தரவுச் சீட்டு சான்றிதழ் அல்லது வேறு எந்த தஸ்தாவேஜுகளாவது ;

(ஈ) கடவுச்சீட்டின் (பாஸ்போட்) அளவுள்ள புகைப்படம், அதன் பின் பக்கத்தில் கீழ்க்காட்டப்படும் அத்தாட்சி, அவ்வாறு அத்தாட்சிப்படுத்தக்கூடியவர் ஒருவரால் கையொப்பப்படிவத்தில் இருத்தல் வேண்டும்.

பின்புறத்திலுள்ள புகைப்படம்.............என்பவருடையதென்பதையும், அன்னாரின் கையொப்பம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதென்பதையும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

..............................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

........................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

பரீட்சை மண்டபத்தில் தனது அடையாளச் சீட்டைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்தப் பரீட்சார்த்தியும் தகைமையிழந்தவராவர்.

10. **பரீட்சைத் திட்டம்.**—பரீட்சை இரு பகுதிகளாக—அதாவது பகுதி 1— (எழுத்து), பகுதி 2— (நேர்முகம்) நடாத்தப்படும். பரீட்சைப் பாடங்களும், ஒவ்வொரு பாடத்துக்குக் கொடுக்கப்பட்ட புள்ளிகளும் கீழே தரப்படுகின்றன. எல்லா எழுத்துத் தாள்களிலும், கூடாத கையெழுத்துக்கும், எழுத்துக்கூட்டல் பிழைகளுக்கும் புள்ளி கழிக்கப்படும். தெளிவற்ற கையெழுத்துடைய பரீட்சார்த்திகள் தகைமையிழப்பதற்கு உட்பட்டவராவர்.

**பகுதி—எழுத்துப் பரீட்சை**

புள்ளிகள் : 100.

கீழ் இழுவிசை விநியோக முறை நிர்மாணமும் பராமரிப்பும் ; டீசல் மின் உற்பத்தி நிலையங்களின் இயக்குவிப்பும், பராமரிப்பும் ; கட்டடங்களில் மின்சார அமைப்பு முறைகளும், சோதனைகளும் ; மின்சார அமைப்புப் பராமரிப்பும் சோதனைகளும் ; விநியோகத் தொடர்ச்சிகளுக்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல் ; 1950 ம் ஆண்டின் 19 ம் இலக்க மின்சார அதிகாரச் சட்டத்தின் பிரமாணங்களும் பாதுகாப்பு விதிகளும், ஆகிய விஷயங்களில் பரீட்சார்த்திகளின் அடிப்படைச் சித்தாந்த, செய்முறை அறிவைத் தீர்மானிப்பதற்கான 3 மணித்தியாலத் தாள்.

**பகுதி 2—நேர்முகப் பரீட்சை**

புள்ளிகள் : 100.

**பி.கு.** :—பரீட்சை ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் நடாத்தப்படும்.

11. எழுத்துப் பரீட்சை முதலில் நடைபெறும். அதன் பெறுபேறுகளின்பேரில், நேர்முகப் பரீட்சைக்கு பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்படுவர். இதுவும் கொழும்பில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினால் விதிக்கப்படும்.

12. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகளின் பெயர்கள், அரசாங்க வர்த்தமானியின் 4 வது பகுதியில் பிரசுரமாகும். வெற்றிடங்கள் வந்தாலும் வரும்பொழுதும் அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

எட்கா பர்னாந்து,
செயலாளர்,
உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை.

உ. ஆ. சே. அ. சபை அலுவலகம்,
த. பெ. 530,
கொழும்பு 1.
1973 ம் ஆண்டு பெப்புருவரி மீ 8 ந் வ.

**உள்ளூராட்சிச் சேவை**

உள்ளூர் ஆட்சி மின்சார அத்தியட்சர்களின் சேவையின் தரம் 4 ற்கான ஆட்சேர்ப்புக்கான பரீட்சை, 1973

**பிரவேசத்திற்கான விண்ணப்பம்**

**கவனிக்க.**—பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தினால் இப்படிவம் சரியாகவும், தெளிவாகவும் நிரப்பப்பட்டு தான் சேவைசெய்யும் உள்ளூராட்சி மன்றச் செயலாளரூடாக 15.3.73 ற்குப் பிந்தாமல், கொழும்பு 1, த. பெ. 530, உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்குக் கிடைக்கும்படியாக அனுப்பப்பட வேண்டும்.

1. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் : ————.
2. பரீட்சார்த்தி தற்பொழுது ஊழியஞ் செய்விக்கப்படும் உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் : ————.
3. உள்ளூர் ஆட்சி மின்சார முகாமிகளின் சேவையின் தரம் 1 ற்கு முதலில் நியமிக்கப்பட்ட திகதி : ————.
4. உள்ளூர் ஆட்சி மின்சார முகாமி சேவையின் தரம் 2 க்கு முதலில் நியமிக்கப்பட்ட திகதி : ————.
5. தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி : ————.
6. உள்ளூர் ஆட்சிச் சேவையில் முதலில் நியமனம் பெற்ற திகதி, முதல் வகித்த பதவிகளின் பதவிப் பெயர்கள் : ————.
7. பின்வரும் மொழிகளில், எந்தமொழி மூலம் பரீட்சையை எடுக்க விரும்புகிறீர்கள் என்று குறிப்பிடவும் : ————.

சிங்களம் : ————.
ஆங்கிலம் : ————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையென நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். பரீட்சையில் பிரமாணங்களுக்கு அமைந்தொழுக சம்மதிக்கிறேன். இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களின் பிரகாரம் யான் தகுதியற்றவனென கண்டுபிடிக்கப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மை இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படுமென்பதையும் அறிவேன்.

| |
|---|
| விண்ணப்பதாரர் இவ்விடத்தில் ரூபா 20/- பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன் மேல் திகதியுடன் கையெழுத்திட வேண்டும். |

.........
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ............
செயலாளர், உ. ஆ. சே. அ. ச.

இவ் உள்ளூராட்சி மன்றத்தின் பணியாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றும் மேற்படி பரீட்சார்த்தி, உள்ளூர் ஆட்சி மின்சார முகாமிகள் சேவையின் தரம் 1 / தரம் 2 ல் ...............முதல் இருந்து வருகிறார் என்றும், அவரது சேவைக்காலம் பூராவும் திருப்திகரமாயுள்ளது என்றும் நான் சான்றுரைக்கின்றேன். தனது விண்ணப்பத்தில் அவர் குறிப்பிடும் தகவல்கள் சரியானவை.

.........
கையொப்பம்,
ஆணையாளர்/தலைவர்.

உள்ளூராட்சி மன்றம் : ————.
திகதி : ————.

2–752—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

எல். டி.—பி. 28/71

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் பதுளை மாவட்டத்திலுள்ள எத்தம்பிட்டியா கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் தமக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

பீ. சிறிவர்த்தன,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 5 ந் வ.

**துணைவிதிகள்**

1. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகளின் 7 ஆம் பாகத்தில் அல்லது 12 ஆம் பாகத்தில் உள்ள துணைவிதிகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும், இத்துணைவிதிகளின் கீழ் முன்னரே அழிக்கப்பட்டிருந்தாலன்றி அத்தகைய உரிமம் எந்த வருடம் தொடர்பில் வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் டிசம்பர் மாதம் முப்பத்தோராந் திகதியன்று முடிவுறுதல் வேண்டும்.

2. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகளின் 7, 10, 11, 12, 13, 15, 16, 17, 18, 19, 20, 22, 26 அல்லது 27 ஆகிய பாகங்களில் உள்ள துணைவிதிகளின் கீழான உரிமத்துக்கான விண்ணப்பமொவ்வொன்றும், அதன் நோக்கத்திற்காகச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட படிவத்தில் இரு பிரதிகளில் செய்யப்பட்டு—

(அ) அத்தகைய விண்ணப்பம் ஒரு புதிய உரிமத்துக்காயிருப்பின், அந்த உரிமம் எத்தொழிலின் பொருட்டுத் தேவைப்படுகின்றதோ அத்தொழிலைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன் முப்பது நாட்களுக்குக் குறையாமலும்,

(ஆ) அத்தகைய விண்ணப்பம் ஏற்கனவேயிருக்கும் உரிமத்தைப் புதுப்பிப்பதற்காகவிருப்பின், அவ்விண்ணப்பம் எவ்வருடம் தொடர்பாக அவ்வுரிமம் புதுப்பிக்கப்படல் வேண்டுமோ அவ்வருடத்துக்கு முந்திய வருடத்தின் செத்தெம்பர் மாதம் முதலாந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தலைவருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

3. இந்தத் துணைவிதிகளில்—" தலைவர் " என்பது சபையின் தலைவர் எனப் பொருள்படும் ; அத்துடன் " சபை " என்பது பதுளை மாவட்டத்திலுள்ள எத்தம்பிட்டியா கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை எனப் பொருள்படும்.

2–728—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

**ஊராட்சி மன்றம், வங்காலை**

மன்னார் மாவட்டம்

**இறைச்சிக்காரர் பற்றிய கட்டளைச் சட்டம்**

இறைச்சிக்கடைக்காரர் பற்றிய கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 272) பிரிவு 7 (2) ன் தாற்பரியப்படி இதன் கீழ் காணப்படும் அட்டவணையிற் காண்பவர்களிடமிருந்து 1973 ம் ஆண்டுக்கு அட்டவணையிற் குறிப்பிட்ட இடத்தில் குறித்த தன்மைவாய்ந்த வியாபாரம் செய்ய உத்தரவு தரும்படி விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இக் கிராமசபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறித்த நபர்களுக்கு உத்தரவுப்பத்திரம் வழங்குவதை மறுக்க விரும்பினால், அம் மறுப்புக்கான காரணங்களை இவ்வறிவித்தலில் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினன்கு நாட்களுக்குள் இணைப் பிரதிகளில் எழுத்து மூலம் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எஸ். இ. குருஸ்,
தலைவர்,
ஊராட்சி மன்றம், வங்காலை.

ஊராட்சி மன்றப் பணிமனை,
வங்காலை,
1973 ம் ஆண்டு சனவரி மீ 27 ந் உ.

அட்டவணை

| பெயர் | வியாபாரத்தின் தன்மை | இடம் |
|---|---|---|
| 1. அ. செபஸ்தியான் மிராண்டா, வட்டார இல. 9, வங்காலை | மாட்டிறைச்சிக் கடை இல. (1) | பொதுச் சந்தை, வங்காலை |
| 2. ம. அந்தோனி வாஸ், வட்டார இல : 4, வங்காலை | மாட்டிறைச்சிக் கடை இல. (2) | பொதுச் சந்தை, வங்காலை |

2-427—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

**நடுச்செட்டிகுளம் கிராம சபை**

கசாப்புக்காரர் கட்டளைச் சட்டம்

கசாப்புக்காரர் பற்றிய கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 272) 7 (2) ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் காண்பவரிடமிருந்து 1973 ம் ஆண்டிற்கு கசாப்புக் கடைக்கு அனுமதி தரும்படி விண்ணப்பம் கிடைத்துள்ளது.

இக்கிராம சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் அனுமதி கொடுப்பதை மறுக்க விரும்பினால் மறுப்புக்கான காரணங்களை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினன்கு தினங்களுள் இணைப்பிரதியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அட்டவணை

| விண்ணப்பகாரர் | வியாபாரம் செய்யுமிடம் | வியாபாரத்தின் தன்மை |
|---|---|---|
| எம். எம். யூசுப், குருமன்காடு, வவுனியா | 2 ம் கட்டை, நெளுக்குளம் | ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி |

பொ. திருஞானசம்பந்தன்,
தலைவர்,
நடுச்செட்டிகுளம் கிராம சபை.

நடுச்செட்டிக்குளம் கிராம சபை அலுவலகம்,
பம்பைமடுச் சந்தி,
வவுனியா,
1973 ம் ஆண்டு சனவரி மீ 20 ந் உ.

2-745—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட்ட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| பெப்புருவரி .. | 2.2.73 | வெள்ளி .. | 26.1.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 9.2.73 | வெள்ளி .. | 2.2.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 15.2.73 | வியாழன் .. | 9.2.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 23.2.73 | வெள்ளி .. | 15.2.73 | வியாழன் .. | ந.ப. 12.00 |
| மார்ச் .. | 2.3.73 | வெள்ளி .. | 23.2.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 9.3.73 | வெள்ளி .. | 2.3.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 16.3.73 | வெள்ளி .. | 9.3.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 23.3.73 | வெள்ளி .. | 16.3.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 30.3.73 | வெள்ளி .. | 23.3.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| ஏப்பிறில் .. | 6.4.73 | வெள்ளி .. | 30.3.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் .. | 6.4.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் .. | 11.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி .. | 19.4.73 | வியாழன் .. | ந.ப. 12.00 |

**எல். டப்ளியூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.